4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 31/2012 நாள்: 23.09.2025 பி.வா.சா.2 – அனந்தமுருகன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

எனது தாயார் காலமான பிறகு சோமசுந்தரம் எனக்கு உயில் ஆவணம் பற்றி தகவல் கொடுத்த பிறகு நான் எந்த தேதியில் எனது தாயார் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில் ஆவணத்தை பார்த்தேன் என்றால் சாட்சி தேதி ஞாபகம் இல்லை, எனது தாயார் இறந்து 3வது நாள் நான் உயில் ஆவணத்தை பார்த்தேன் என்று கூறுகிறார். நான் உயில் ஆவணம் என்று சொல்லவில்லை, உயில் ஆவணங்களை பார்த்தேன் என்று தான் சொல்லியுள்ளேன். மேற்படி சோமசுந்தரம் மேற்படி உயில் ஆவணங்கள் பற்றி எழுத்து மூலமாக எனது சகோதர, சகோதரிகளுக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நானும் உயில் ஆவணங்கள் பற்றி எழுத்து மூலமாக சகோதர, சகோதரிகளுக்கு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். உயில் ஆவணங்களின் நகல்களை எனது சகோதர, சகோதரிகளுக்கு நான் அனுப்பி வைக்கவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ .13 ஆவணப்படி நான், எனது தாயார், எனது சகோதரர்கள் ஆகியோர்கள் பிரபு மோட்டார் சர்வீசுக்கு பங்குதாரர்கள் என்றால் சரிதான். மேற்படி கூட்டாண்மை நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். 14.09.2009 அன்று ஏற்படுத்திய உயில் ஆவணப்படி எனது தாயார் மேற்படி நிறுவனத்தில் உள்ள தன்னுடைய 50 சதவீத பங்கை என்னுடைய இரண்டு மகன்களுக்கும் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி எனது

தாயார் இறந்த பிறகு தான் மேற்படி உயில் ஆவணம் நடைமுறைக்கு வரும் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தை எனது தாயார் எழுதி வைத்திருப்பது பற்றி கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்த பதிவாளருக்கு நான் தகவல் தெரிவிக்கவில்லை. எனது தாயார் இறந்த பிறகு எனது மகன்கள் மற்றும் எனது சகோதரருடன் புதிய பங்கு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டோமா என்றால் சாட்சி வழக்கு நடப்பதால் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்று கூறுகிறார். எனது மகன்கள் மேற்படி உயில் படி கிடைத்த பங்கை பொறுத்து தங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நீதிமன்ற கட்டணம் செலுத்தி பரிகாரம் எதுவும் கோரி எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. மேற்படி கூட்டாண்மை பத்திரத்தில் புதியதாக பங்குதாரர்களை சேர்க்க வேண்டும் என்றால் ஏற்கனவே இருக்கின்ற பங்குதாரர்கள் சம்மதம் தெரிவிக்க வேண்டும் என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும், எனது சகோதரரும், எனது மகன்களை பங்குதாரர்களாக சேர்க்க சம்மத கடிதம் எதுவும் கொடுக்கவில்லை, ஏனென்றால் வழக்கு நடப்பதால் கடிதம் கொடுக்கவில்லை. எனது மகன்களோடு சேர்த்து கூட்டாண்மை பத்திரம் ஏற்படுத்தாததால், எனது மகன்களுக்கு மேற்படி கூட்டாண்மை பத்திரத்தில் உள்ள சொத்துக்களில் எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல, உயில்படி அவர்களுக்க உரிமையுண்டு என்று சாட்சி கூறுகிறார். கூட்டாண்மை பத்திரத்தில் எனது மகன்கள் தரப்பினர்கள் அல்ல என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது மகன்களை சாட்சிகளாக விசாரிக்க போகிறேன். நானும், எனது அண்ணனின் சம்மதம் இல்லாமல் கூட்டாண்மை நிறுவனத்தில் எனது மகன்களை சேர்க்க முடியாததால் மேற்படி உயில் ஆவணப்படி எனது மகன்களை பங்குதாரர்களாக கருதமுடியாது என்றால் சரியல்ல. எனது தாயார் உயில் ஆவணத்தை எழுதியே வைக்கவில்லை என்று வாதிகள் மறுக்கின்ற விவரம் எனக்கு தெரியும். உயில் ஆவணம்

ஏற்படுத்திய பிறகு எனது தாயார் அது பற்றி யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று எனது தாயார் சொல்லிய விவரம் பற்றி என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மகன்கள் கூட்டாண்மை நிறுவனத்தில் பங்குதாரர்கள் என்று தினசரி நாளிதழில் விளம்பரம் எதுவும் கொடுக்கவில்லை. எனது தாயார் இறந்தபிறகு கூட்டாண்மை நிறுவன வரவு செலவு சம்பந்தமாக வருமான வரி கணக்கு பராமரிக்கவில்லை. எனது தாயார் இறந்த பிறகு மேற்படி நிறுவனத்தின் வரவு செலவு கணக்கை பார்க்கவில்லை. 2009 ம்ஆண்டு உயில் ஆவணமான பி.சா.ஆ.31 ஐ நான் படித்து பார்த்தேன். உயில் ஆவணம் தயார் செய்வதற்கு முத்திரை தாள் தேவையில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் உயில் ஆவணத்தை எடுத்த பிறகு யாரிடமும் அது பற்றி விசாரணை செய்யவில்லை. 2009 ல் எழுதியதாக சொல்லப்படும் மேற்படி உயில் ஆவணம் நானும், சோமசுந்தரமும் சேர்ந்து கூட்டாக சதிசெய்து ஏற்படுத்திய மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல. செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனக்கு எப்போது தெரியும் என்றால் சாட்சி எனது தாயார் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய இரண்டாம் நாள் என்னிடம் கொடுத்த போது எனக்கு தெரியும். மேற்படி இரண்டு நாட்கள் கழித்து செட்டில்மெண்ட் ஆவணத்தை தந்த விவரத்தை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதியது சம்பந்தமாக சோமசுந்தரத்திடம் சொல்ல வேண்டாம் என்று எனது தாயார் சொல்லியுள்ள போதும், செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய இரண்டாம் நாள் என்னிடம் செட்டில்மெண்ட் ஆவணத்தை கொடுத்து விட்டார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணமான பி.சா.ஆ.5 ஆவணத்தில் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய தேதியிலேயே சுவாதீனம் ஒப்படைத்ததாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணப்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை, மேற்படி

ஆவணம் ஏற்படுத்திய தேதியன்று என்னிடம் கொடுக்கவில்லை. பொதுவாக பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ஆவணம் பதிவு செய்யப்பட்டால், அன்றைய தினமே பதிவு செய்த ஆவணத்தை பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கொடுக்க மாட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். பி.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணத்தை எனது தாயார் எப்போது பதிவாளர் அலுவலகத்தில் இருந்து வாங்கினார் என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.5 ஆன செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்து வீடு என்பதால் அது வருமானம் தரக்கூடிய சொத்து அல்ல. செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள எனது தாயாரின் கையொப்பங்கள் வேறுபாடாக உள்ளது என்று சொன்னால் சாட்சி செட்டில்மெண்ட் மற்றும் உயில் ஆவணத்தில் உள்ள எனது தாயாரின் கையொப்பங்களை அவர் போட்டதாக சொல்லப்படும் சமயத்தில் நான் பார்க்கவில்லை என்று கூறுகிறார். மேற்படி பி.சா.ஆ.5 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய தேதியிலேயே பி.சா.ஆ.32 உயில் ஆவணத்தை எனது தாயார் எழுதியதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தை பற்றி எனது தாயார் சொல்ல வேண்டாம் என்று சோமசுந்தரத்திடம் சொன்ன விவரத்தை சோமசுந்தரம் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி உயில் ஆவணத்தை யார் வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது, எனது தாயார் வாங்கியிருப்பார் என்று கூறுகிறார்.

மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.